# யூலை – 19 – வியாழன்

## புனித விக்ரர்

## நீர் எழுந்தருளி, சீயோனுக்கு இரக்கம் காட்டும்: திபா. 102:13

**முதல் வாசகம் : ஏசாயா 26:7– 9, 11,16 – 19**

நீதிமான்களின் நெறிகள் நேரியவை. நீர் நேர்மையாளரின் வழியைச் செம்மையாக்குகின்றீர்.ஆண்டவரே, உமது நீதியின் நெறியில் நடந்து, உமக்காகக் காத்திருக்கிறோம், உமது திருப்பெயரும் உமது நினைவும் எங்களுக்கு இன்பமாய் உள்ளன. என்நெஞ்சம் இரவில் உம்மை நாடுகின்றது. எனக்குள்ளிருக்கும் ஆவி ஏக்கத்தோடு உம்மைத் தேடுகின்றது. உம் நீதித்தீர்ப்புகள் நிலவுலகில் நிலைத்திருக்கையில் வாழ்வோர் நேர்மையைக் கற்றுக் கொள்வர். ஆண்டவரே, ஓங்கிய உம்கையை அவர்கள் காண்பதில்லை. உம்மக்கள்மீது நீர் கொண்டபேரார்வத்தை அவர்கள் கண்டுநாணட்டும்! உம் பகைவர்களுக்காக மூட்டிய தீ அவர்களை விழுங்கட்டும்!ஆண்டவரே, துயரத்தில் உம்மைத் தேடினோம் நீர் எங்களைத் தண்டிக்கும்போது, உம்மைநோக்கி மன்றாடினோம்.பேறுகாலம் நெருங்குகையில், கருவுற்றவள் தன் வேதனையில் வருந்திக் கதறுவதுபோல், ஆண்டவரே, நாங்களும் உம்முன்னிலையில் இருக்கின்றோம்! நாங்களும் கருவுற்று வேதனையில் துடித்தோம் ஆனால், காற்றைப் பெற்றெடுத்தவர் போலானோம் நாடு விடுதலைபெற, நாங்கள் எதையும் சாதிக்கவில்லை. உலகில் குடியிருக்க, எவரும் பிறக்கப் போவதில்லை.இறந்த உம்மக்கள் உயிர்பெறுவர் அவர்களின் உயிரற்ற உடல்கள் மீண்டும் எழும். புழுதியில் வாழ்வோரே, விழித்தெழுந்து மகிழ்ந்து பாடுங்கள். ஏனெனில், நீர் பெய்விக்கும் பனி ஒளியின் பனி இறந்தோர் நிழல்களின் நாட்டிலும் அதை விழச்செய்கின்றீர்.

**பதில்பாடல் :** விண்ணுலகினின்று ஆண்டவர் வையகத்தை கண்ணோக்கினார்.

**நற்செய்தி : மத்தேயு 11: 28 – 30**

அக்காலத்தில் இயேசு கூறியது : ”பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான்கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.ஆம், என் நுகம் அழுத்தாது. என் சுமை எளிதாயுள்ளது” என்றார்

**தியானம்:** புனித பிரான்சிஸ்கு சவேரியாரும் இன்னும் சில மறைப்பணியாளர்களும் நற்செய்தி போதிப்பதற்காக கப்பலில் ஐரோப்பாவிலிருந்து இந்தியா வரும்வழியில் மெசாம்பிக் என்ற இடத்தில் ஏறத்தாழ 15 நாட்கள்தங்க வேண்டி இருந்தது, அங்கு அவர்கள் நோயுற்றவர்களுக்கு செய்த பணியைக் கண்டு அங்கிருந்த மக்கள் மிக்க ஆச்சரியமடைந்து அவர்களைப்பற்றி பெருமையாகப் பேசினர். அங்கு நடந்ததை சவேரியார் இவ்வாறு கூறுகின்றார். ”உணவு கூட உண்ணாமல், உடல்நோயால் துன்புற்ற மனிதர்களோடு எங்கள் எல்லா நேரத்தையும் நாங்கள் செலவழித்ததைப் பார்த்த அம்மக்கள் ஆச்சரியமடைந்து தங்களுக்குள் இவ்வாறு பேசிக்கொண்டனர். ”இவர்கள் இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டவர்களாக செயல்படுகின்றார்களே. கடினமான வேலைகளுக்குப் பின் ஓய்வெடுக்க வேண்டிய நேரத்தில், புதிய வேலையைத தொடங்கி உற்சாகத்துடன் செயல்படுகின்றார்கள். களைப்படைய வேண்டிய நேரத்தில் மிகவும் உற்சாகமாக ஆற்றலோடும், வல்லமையோடும், இருக்கின்றார்கள் அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது கடவுள் தான் எங்கள் இளைப்பாறுதலும் ஆற்றலுமாய் இருக்கின்றார் என்ற உண்மை. வலுவற்றோருக்கு வலுவும், ஆற்றல் இழந்தோருக்கு ஆற்றலும் பலவீனர்களுக்கு பலமும் தருவது தான் இறைவனின் இயல்பு எனவே தான் திருத்தந்தை 16 பெனடிற் “இந்த பகுதி (மத்:11:28-30) இறைமகன் இயேசுவின் ஆளுமையைப் பற்றிய ஒரு ஆழமான புரிதலை நமக்கு தருகிறது என்று சொல்கின்றார். கடவுள் என்பவர் நம் மூளையை நிரப்புகின்றவர் என்ற கருத்து அல்ல, மாறாக நம் இதயத்தை நிரப்புகின்ற பிரசன்னம் என்பதை உணர்ந்து வாழ்வோம்.